1969 செப்டம்பர் 12]

With regard to the motion itself. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குத் திருத்தம் கொடுக்க வாய்ப்பில்லை என்பது தானே உங்கள் வாதம்? அவையிலே அந்த அறிக்கையைக் கொடுத்த பிறகுதானே, திருத்தம் கொடுக்கும் உரிமை வருகிறது? ஆகவே, இப்பொழுது இன்னொரு நாள் இதை எடுத்துக் கொள்ளலாம், விவாதிக்கலாம் என்றால், இன்றைக்கு அறிக்கையை அவைக்கு அளித்த அளவோடு வைத்துக் கொண்டு, திருத்தம் கொடுத்து, இன்னொரு நாள் விவாதித்துக் கொள்ளலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, இப்படிப் பட்ட அறிக்கை சபைமுன் வைக்கப்படவேண்டும். அநேகமாக, பிரிவிலேஜ் கமிட்டி அறிக்கை கொடுத்த பிறகு, விவாதம் இல்லாமல் ஏற்றுக்கொள்வது என்கிற மரபு இருக்கிறது என்பதைத் தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். திருத்தம் கொடுக்க உரிமை இருக்கிறது. ஆனாலும், கமிட்டி ஒரு முடிவுக்கு வந்தபிறகு. விவாதம் நடத்த வேண்டாம் என்கிற மரபை அநேகமாக கையாண்டு வந்திருக்கிறோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, எஸ்டிமேட்ஸ் கமிட்டி போன்ற கமிட்டிகளின் ரிபோர்ட்டுகளை அப்படியே சபை ஏற்றுக்கொள்வதுதான் வழக்கம் என்பதை ஞாபகப்படுத்த மட்டும் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிடுவது போன்ற முறை, மரபு இருக்கிறது. அப்படியே ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேறுகிறது வழக்கம். ஆனாலும், டாக்டர் ஹாண்டே அவர்கள் சட்டமன்ற விதிமுறைகளை ஒட்டி விவாதிக்க வாய்ப்பு வேண்டும் என்று சொன்னால், அதைக் கொடுப்பதிலும் தவறு இல்லை.

DR. H. V. HANDE : If I can speak straightaway now itself. . . . .

MR. SPEAKER : No, no.

DR. H. V. HANDE : We will have it tomorrow.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அஜண்டாவில் எப்பொழுது வருகிறதோ அப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.

8. அரசினர் தீர்மானம்

கிழக்கு தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர் சிக்கல்கள் குறித்த திரு. கணபதியா பிள்ளை விசாரணைக் குழுவின் அறிக்கை மீது விவாதம்

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

175-208-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

"கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர்கள் சிக்கல்களைக் குறித்த திரு. எஸ். கணபதியாப் பிள்ளை விசாரணைக் குழுவின் அறிக்கை* பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இந்த அறிக்கையானது ஏற்கனவேயே நம்முடைய மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதை யொட்டி, முன்னால் நாம் அவசரச் சட்டமாகப் போட்டிருப்பதைச் சட்டபூர்வமானதாக ஆக்க, மசோதா பின்னால் எடுக்கப்பட விருக்கிறது. மாமன்றத்தின் உறுப்பினர்கள் வெகுநாளாக அலைக்கழிக்கப்பட்டிருந்த, மிக முக்கியமான பிரச்சினை இந்த விவசாயத் தொழிலாளர்களுடைய பிரச்சினை. இதை வெறும் விவசாயத் தொழிலாளர்களுடைய பிரச்சினையாக அணுகுவதை விட, இதை மற்ற வகையில் பார்ப்பதுதான் அவசியம். அந்த அளவில் இது முக்கியத்துவம் அடைந்துள்ள பிரச்சினை என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே, இது ஒரு உணவு உற்பத்திப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, அப்படிப் பல்வேறு தன்மைகளைக் கொண்ட பிரச்சினை என்ற அளவில், முன்னாள் முதலமைச்சரான, நம் அண்ணனை, பேரறிஞர் அண்ணா அவர்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கும், நிலக்கிழார்களுக்கும் இடையே உள்ள உறவு முறைகள் ஆராயப்பட வேண்டும் என்று 1968-ம் ஆண்டில், ஒரு குழுவினை அமைத்து, அக்குழு விளக்கமாக விசாரித்துப் பல சிபாரிசுகளைச் செய்திருக்கிறது.

இந்தச் சிபாரிசுகளைப் பார்க்கும்போது, கிழக்குத் தஞ்சாவூரின் பின்னணியையும் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்து உறுப்பினர்கள் கொடுக்கும் மேலான அபிப்பிராயங்களையும் கேட்டுக்கொண்டு, அதற்கும் பிறகு அரசாங்கம் அந்தச் சிபாரிசுகளை அமுல்படுத்துவது பற்றி முடிவு எடுக்கவிருக்கிறது. உங்களுடைய மேலான கருத்துக்களையும் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுவாக அங்குள்ள விவசாயிகள், நிலச் சொந்தக்காரர்கள் இவர்களிடையே உள்ள உறவு முறைகள் என்று சொல்லும்போது, தஞ்சாவூருக்கு ஒரு பிரத்தியேகமான நிலை உண்டு. அந்த மாவட்டத்தில் 14,33,203 எக்கர்கள் மொத்தம் பயிரிடும் நிலங்கள் இருக்கின்றன. கிழக்குத் தஞ்சாவூரில், இன்றைக்கு விவாதப் பொருளாக இருக்கும் நிலப்பரப்பு 7,47,104 எக்கர்கள். இது நெல் சாகுபடியின்கீழ் இருக்கிறது.

தமிழ்நாட்டிலே உணவுப் பொருள்களை மிக அதிகமான அளவிலே விளைவிக்கிற மிகப் பெரிய மாவட்டம் தஞ்சாவூர் மாவட்டமாகும். தஞ்சாவூர் மாவட்டத்தில் 14 லட்சம் எக்கர் பரப்பளவில் விவசாயம் செய்யப்படுகிறது. அதிலே கிழக்குத் தஞ்சாவூர் என்று அழைக்கப் படும் சீர்காழி, மாயவரம், நன்னிலம், நாகப்பட்டினம், மன்னார்குடி,

1969 செப்டம்பர் 12] [திரு. கே. ஏ. மதியழகன்]

திருத்துறைப்பூண்டி ஆகிய ஆறு தாலுக்காக்களிலும் சேர்ந்து சுமார் 7 லட்சத்து 47 ஆயிரம் ஏக்கர் சொச்சம் நிலங்களில் சாகுபடி செய்யப்படுகின்றது. சமீப காலத்திலே புதிய அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற பசுமைப் புரட்சியின் காரணமாக, இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே தஞ்சாவூர் மாவட்டத்தில் மேலும் இரண்டு லட்சம் ஏக்கர் நிலங்கள் புதிதாக சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. கிழக்குத் தஞ்சாவூர் பகுதியில், ஆக மொத்தம் 8 அல்லது 8½ லட்சம் ஏக்கர் அளவில் உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகவே, இந்த அறிக்கை முழுக்க முழுக்க உணவு உற்பத்தியைப் பொறுத்த பிரச்சினையாக இருக்கிறது.

அடுத்தபடியாக, தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மக்கள் தொகை 30 லட்சம் அல்லது 33 லட்சம் பேர் இருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் இருக்கும்படியான விவசாயிகளில் பாதிப்பேர் நிலம் இல்லாதவர்கள். பாதிப்பேரில் கொஞ்சநஞ்சம் பேர் நிலம் வைத்திருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் 940,643 பேர் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இதில் கொஞ்சம்கூட நிலம் இல்லாதவர்கள் 445,000 பேர் விவசாயக் கூலிகளாகவே இருக்கிறார்கள். இதில் கிழக்குத் தஞ்சவூரில் 269,657 பேர் விவசாயக் கூலிகள், விவசாயத் தொழிலாளர்களில் 90 சதவிகிதத்தினர் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆண்டாண்டுக் காலமாகவே சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகவே இருந்து வந்தார்கள். இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால், கிழக்குத் தஞ்சாவூர் பகுதியான சீர்காழி, மாயவரம், நன்னிலம், நாகப்பட்டினம், திருத்துறைப் பூண்டி, மன்னார்குடி ஆகிய ஆறு தாலுகாக்களிலும் இருக்கிற மொத்த ஜனத்தொகையிலே 28 சதவிகிதத்தினர் அரிசன மக்களாகவே இருக்கிறார்கள். இந்த அறிக்கையானது இவர்களுடைய பிரச்சினையைக் கூர்மைப்படுத்தியிருக்கிறது.

அடுத்தபடியாக, பெரிய மிராசுதார்கள் கிழக்குத் தஞ்சாவூர், மேற்குத் தஞ்சாவூர் ஆகிய இரு பகுதிகளிலும் இருக்கிறார்கள். ஆனால் கிழக்குத் தஞ்சாவூரிலும் மேற்குத் தஞ்சாவூரிலும் இருக்கிற நிலைமை முற்றிலும் வேறானவை. கிழக்குத் தஞ்சாவூரைப் பொறுத்தவரையில் 12 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத்திருக்கக் கூடிய நிலச்சுவான்தார்கள் 7,441 பேர், ஆறு தாலுக்காக்களிலும் இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில், 12 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத்திருக்கும் பெரிய நிலச்சுவான்தார்கள் மேற்குத் தஞ்சாவூரில் 3,628 பேர்கள்தான் இருக்கிறார்கள். இதை இந்த மன்றத்தின் நினைவுக்குக் கொண்டுவருவதற்குக் காரணம், மேற்குத் தஞ்சாவூர்ப் பகுதியை விட கிழக்குத் தஞ்சாவூர் பகுதியில்தான் பெரிய அளவில் நிலச்சுவான்தார்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதற்காக தான் இந்த அறிக்கையை, விவசாயிகளுக்கு நான்கு லிட்டர் கூலி என்று கொடுப்பதை ஆறு லிட்டர் கூலி கொடுக்கும்

பிரச்சினையாக எண்ணவில்லை. இந்த மாநிலத்தில் உணவு உற்பத்தியை, இந்த மாநிலத்தின் பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதற்காக வேண்டிய அம்சங்கள் இதில் அடங்கியிருப்பதாகக் கருதுகிறேன். விவசாயத்தில் பாடுபடுபவர்களுக்கு நியாயமான கூலி கொடுக்க வேண்டும், விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்வில் அமைதி நிலவ வேண்டும். உணவு உற்பத்தி பெருக வேண்டும். விவசாயத்தின் பெயரால் நடக்கும் நாச காரியங்கள் மாநிலத்தின் பொருளாதாரத்தை ஸ்தம்பித்துவிடும். நியாயமான காரியங்களுக்காக நியாயமான உரிமைகளை நியாயமான வழிகளில் செய்வதே நல்லது. காலஞ்சென்ற முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் துவங்கிய முதல் முயற்சி, அறிக்கையாக வந்து பரிசிலனையில் இருக்கிறது. இந்த முயற்சிக்கு இந்த மன்றத்தின் விவாதம் பெரிதும் உதவும் என்று கருதுகிறேன்.

இன்றையதினம் மாறிவரும் கால நிலைமைகளுக்கேற்ப, இந்த மன்றத்தில் உழவர்களுக்குப் பல்வேறு மசோதாக்களை நாம் உருவாக்கிக்கொண்டு வருகிறோம். எற்கெனவே இருந்துவரும் நியாய வாரச் சட்டம், சாகுபடிதாரர் பாதுகாப்புச் சட்டம், உச்ச வரம்புச் சட்டம் ஆகியவைகளில் இருக்கும் ஓட்டை, உடைசல்களையெல்லாம் போக்கி, நல்ல வகையில் அமைக்கப் பல்வேறு சட்டங்கள் நம் முன் இருக்கின்றன. சமீப காலத்தில் அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தியதை இந்த மன்றம் அறியும்; நாமும் அறிவோம். இப்பொழுது வைத்திருக்கப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருக்கிற பல்வேறு கருத்துக்களை உறுப்பினர்கள் ஆராய்ந்து, தங்களுடைய மேலான யோசனைகளைச் சொல்வதன் மூலம் நிலச்சீர்திருத்தத்திற்கும், மற்றபடி பொருளாதார அபிவிருத்தியடைவதற்கான முயற்சிகளுக்கும் வழி ஏற்படும். ஆகவே, அதற்கு உகந்த வகையில் விவாதம் அமைய வேண்டுமென்று கூறி, இதைத் தொடங்கி வைக்கின்றேன்.

* **திரு. பி. ஜெயராஜ்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த மன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிற கிழக்குத் தஞ்சாவூர் விவசாயக் கூலி குறித்த கணபதியாப் பிள்ளை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கிழக்குத் தஞ்சாவூரிலுள்ள விவசாயக் கூலிகள், தங்களுக்குச் சரியான கூலி நிர்ணயச் சட்டம் வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே கூறி வந்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் அரசாங்கம் திரு. கணபதியாப் பிள்ளை அவர்களின் தலைமையில் ஒரு கமிஷனைப் போட்டு அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், இப்போது நடைமுறையில் இருப்பதையே இந்த அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். இது ஒரு பிரம்மாண்டமான புரட்சிகரமான அறிக்கை என்று சொல்வதற்கில்லை. இப்பொழுது நாள் ஒன்றுக்கு ஆண்களுக்கு 3 ரூபாய் என்று 'நடைமுறையில்

இருக்கிறது. அதேபோல பெண்களுக்கு ஐந்து லிட்டர் நெல்லுடன் 25 பைசா என்று நடைமுறையில் இருந்து வருகிறது. இப்போது நடைமுறையில் இருப்பதையேதான் அறிக்கையிலும் கொடுத்திருக்கிருர்கள். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், இது ஒன்றும் புரட்சிகரமானதாக அமையவில்லை. நடைமுறையில் இருப்பது தான் சட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது. சுதந்திரம் பெற்ற பிறகு விவசாயத் தொழிலாளர் மக்களுக்குப் பல்வேறுவகையில், அறுபது-நாற்பது சட்டமும், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டமும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டன. விவசாயத் தொழிலாளர்கள் பத்துப் பன்னிரண்டு சதவிதம் கூலி உயர்வு பெற்றிருக்கிருர்கள். இந்தச் சட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு அதிகமான அளவில் உயர்த்தவில்லை. பண்ணையாள் என்று சொல்லக்கூடிய கூலித் தொழிலாளர்களுக்கு கூலி உயர்த்தப் படவில்லை. நடைமுறையில் இருப்பதையேதான் இன்றைய கூலிச் சட்டமாக, அறிக்கையாக கமிஷன் கொண்டுவந்திருக்கிறதே தவிர, இது உயர்ந்த பட்சமாக இல்லை. ஆண்களுக்குக் கூலி ஆறு லிட்டர் என்று சொல்லும்போது இப்போது எல்லா இடங்களிலும் ஆறு லிட்டர் கொடுக்கிருர்கள். சில இடங்களில் கொடுக்கப்படாமல் இருக்கலாம். விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஒரு ஏக்கர் நிலத்திற்கு 325 ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்த நிலத்தில் 45 கலம் நெல் கண்டுமுதலாகியிருந்தால், செய்யப்பட்ட செலவுக்குப் போக, மிதி 27 கலம் நெல் தான் மிஞ்சும். இதன் காரணமாக விவசாயம் செய்பவர்களுக்கு சராசரியாக 110 ரூபாய்தான் கிடைக்கிறது. ஆகவே, விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிருர்கள். விவசாயத் தொழிலாளர்கள், குத்தகைதாரர்களுக்கு 70 சதவிதம் என்று ஆக்க வேண்டும். அப்போதுதான் விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய முடியும், இல்லையென்ருல் விவசாயத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை.

ஆகவே குத்தகை சாகுபடியை அதிகப்படுத்த வேண்டும். பண்ணைகள் குறிப்பிடப்படவில்லை. அவர்களுடைய கூலி விகிதம் உயர்த்தப்பட வேண்டும். இதனுல் ஓரளவுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கிறதென்று சொல்ல முடியும். ஐந்து லிட்டர் நெல்லை நெல்லாகவோ, பணமாகவோ வாங்கப்படலாம் என்று சொல்லப்படுகிறது. நெல்லாகத்தான் கொடுக்க வேண்டுமென்று வரையறுக்க வேண்டும். பணத்தை வாங்கிக்கொண்டு அவர்கள் நெல் வாங்குவது கஷ்டமாக இருக்கும். கிழக்குத் தஞ்சாவூரில் இருக்கிற விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுகிற அளவு தனிப்பட்டவர்கள் பண்ணையில் வேலைசெய்கிற லட்சக்கணக்கான பண்ணையாட்களுக்கு நன்மை கிடைக்க வழிசெய்ய வேண்டும். அதேநேரத்தில் விவசாயம் செய்கிற சாகுபடியாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இந்த அறிக்கையில் காணப்படவில்லை. அதையும் சேர்க்க வேண்டும். மேலும், அவர்கள் குறிப்பிட்டிருக்கிற செலவுத்தொகை, அதில் இருந்து கிடைக்கும் வருமானம்,

லாபம் இவற்றை நல்லமுறையில் மேலும் பரிசீலனை செய்ய வேண்டும். அறிக்கையில் இருப்பதற்கும், நடைமுறையில் இருப்பதற்கும் ஏற்றத் தாழ்வு இருக்கிறது. இதை ஒரு புரட்சி கரமான திட்டம் என்றோ, விவசாயிகளுக்கு இந்தச் சர்க்கார் உயர்ந்தபட்சம் ஏதோ சாதித்து விட்டது என்றோ சொல்வதற்கில்லை. ஆகவே இவற்றை இன்னும் நல்ல முறையில் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கரு. சீமைச்சாமி : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய கணபதியாப்பிள்ளை அறிக்கை மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் முதலிலே பேசுகின்றபோது இது ஒரு பிராந்தியப் பிரச்சினை அல்ல, தமிழ்நாட்டின் பிரச்சினை என்று சொன்னார்கள். அறிக்கையை உற்றுப் பார்க்கிறபோது பிராந்தியப் பிரச்சினை மாதிரி சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய கருத்து எல்லாம் அரசாங்கம் சட்டத்தைப் போடலாம். போடுகிற சட்டம் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பொதுவாக இருக்கவேண்டுமே தவிர, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துவிட்டு விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் விட்டுவிடக் கூடாது. இந்த அறிக்கையை இப்படித் தான் விட்டிருக்கிறார்கள். நிலப்பிரச்சினை, கூலிப்பிரச்சினை என்பது தமிழ்நாட்டுப் பிரச்சினை. தஞ்சாவூரைப் பொறுத்தே தமிழ்நாடே இருக்கிறது. தஞ்சாவூருக்கு ஒரு சட்டம் என்று கொண்டுவருவது விரிவு அடைகிறபோது மற்ற மாவட்டங்களை எந்த அளவுக்கு அது பாதிக்கும் என்பதையும் நாம் பார்த்தாக வேண்டும். இந்தக் கூலி உயர்வுக்கு கவர்னர் அவர்கள் அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கிற அளவுக்கு என்ன குடி மூழ்கிப் போய் விட்டது என்பதைச் சொன்னால் புரிந்துகொள்ள முடியும்.

இதற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். 1967-இல் தஞ்சை மாவட்டத்தில் அறுவடை சமயத்திலும், நடவு சமயத்திலுமாக 87 வழக்குகள் தொடரப்பட்டன. தாங்கள் விவசாயம் செய்த நெல்லை அறுக்க முடியாத நிலை 85 இடங்களில் இருந்து போலீசார் தலையிட நேரிட்டது. பூந்தாழங்குடி ஷூட்டிங் கேஸ் நடைபெற்றது. வழக்கு வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது. ஆக கட்டுப்பாடாகக் கிளர்ச்சி செய்து எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், அதற்கு அரசாங்கம் இடமளிக்க வேண்டுமா என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கூலிப்பிரச்சினை, தொழிலாளர் பிரச்சினை என்பது கிழக்குத் தஞ்சாவூரில் மாத்திரம்தானா ? இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் தஞ்சாவூர்ச்

1969 செப்டம்பர் 12] *[திரு. கரு. சீமைச்சாமி]*

சீமைக்குப் பிழைக்கச் செல்கிறார்கள். பெண்டு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு செல்கிறார்கள். மலேயாவுக்குச் சென்றார்கள், சிலோனுக்குச் சென்றார்கள். இப்படி இருக்க, ஒரு சட்டத்தைப்போட்டு விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகளிடையே ஒரு நல்லுறவை ஏற்படுத்த முடியுமா என்று கேட்கிறேன். விவசாயம் என்பது சட்டத்தைப்போட்டு நடத்துவது இல்லை. மனிதத் தன்மையைப் பொறுத்து இருக்கிறதே தவிர, சட்டத்தைப்போட்டு நடத்த முடியாது. கணவனுக்கும், மனைவிக்கும் ஒரு சட்டத்தைப் போட்டு அந்தச் சட்டப்படிதான் அவர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்வதைப்போலத்தான் இந்த கணபதியாப் பிள்ளை அறிக்கை, அதன்மீதான சட்டம் வந்திருக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு எட்டு மணி நேர வேலை என்றால் எப்படி சாத்தியம்? அலுவலகத்தில் வேலை செய்கிறவர்களுக்கு எட்டு மணி நேர வேலை என்றால் முடியும். அலுவலகத்தில் கடியாரம் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு எட்டு மணி நேர வேலை என்றால் முடியும். தொழிற்சாலையில் கடியாரம் இருக்கிறது. விவசாய வேலை என்றால் காலை 5 மணிக்கு ஆரம்பித்தாக வேண்டும். முற்பகல் 11-00
நடவின்போது மழை வந்தால் வேலை தடைப்படும். உழவின்போது மழை வந்தால் வேலை தடைப்படும். மழை வந்து வேலை தடைப்பட்டாலும் எங்களுக்கு 8 மணி நேரம் ஆகிவிட்டது என்றால் இதன் மூலம் பல தகராறுகள் ஏற்பட்டு வேலை நடைபெறாது. சமரச அதிகாரியிடம் போக வேண்டும். அவரிடத்திலே பயங்கரமான அதிகாரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயக் கூலி, நியாய உரிமைகளுக்காக அவர்கள் ஜங்கம சொத்துக்களைப் பறிமுதல் செய்துவிடலாம். இப்படிப்பட்ட சட்டத்தின் மூலம் பிரச்சினைகள் வளர்க்கப்படுமே தவிர, நியாயமாக இருக்கவேண்டிய சுமுகமான உறவு, நல்லெண்ண உணர்வு இவற்றை வளர்க்க முடியுமா என்பதை சிந்திக்க வேண்டும்.

சமரஸ அதிகாரி ஒரு விவசாயியிடத்திலே செல்வதாக வைத்துக் கொள்வோம். அவனிடத்திலே ஜப்தி செய்வதற்கு ஒன்றும் இல்லையென்றால், பெண்கள் கழுத்திலே உள்ள சங்கிலியை வாங்குவதற்குக்கூட இடம் இருக்கிற்து, இதை மறுக்க முடியுமா? அப்படி அவர்கள் செய்யமாட்டார்கள் என்பதற்கு அரசாங்கம் என்ன உத்திரவாதம் கொடுப்பார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

நான் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கின்றவன், மண்ணைக் கிண்டிக் கிண்டிப் பிழைக்கிற ஆள். பஸ் அதிபர் அல்ல. விவசாயம் செய்கிறபோது சண்டித்தனம் செய்தால், செய்யவேண்டிய வேலைகளைச் சரியாகச் செய்யாவிட்டால், விவசாயிகளைத் தண்டிப்பதற்கு ஏற்ற வகையில் ஏதாவது இந்த அறிக்கையிலாவது அல்லது சட்டத்திலாவது சொல்லப்பட்டிருக்கிறதா? அப்படி இருக்கிறது என்று காண்பித்தால் நான் சொல்லியவற்றையெல்லாம் வாபஸ் வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்

மில் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்கிறார்கள், அரசாங்க ஊழியர்கள் ஸ்ட்ரைக் செய்கிறார்கள், போலீஸ்காரர்கள் ஸ்ட்ரைக் செய்கிறார்கள். இப்பொழுது விவசாயிகள் 85 இடங்களிலே இங்கே ஸ்ட்ரைக் செய்து இருக்கிறார்கள். இப்படிச் செய்தால் என்ன ஆகும்? நாத்து செத்துவிடும். அறுக்கவேண்டிய நேரத்தில் அறுக்காவிட்டால், பாடுபட்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழ உற்பத்தி செய்த நெல்லை அறுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். விவசாயிகள் ஸ்ட்ரைக் செய்தால் தண்டிப்பதற்குச் சட்டத்திலே இடம் இருக்க வேண்டும்.

திரு. கணபதியாப் பிள்ளை—இந்த அறிக்கையைத் தயாரித்தவர்—ஒரு நீதிபதி. அவர்கள் தெளிவாக கூலி சம்பந்தமாகச் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் நீதியாக அல்ல. கீழ்த் தஞ்சையிலே 150 நாட்கள் முதல் 190 நாட்களுக்குத்தான் வேலையிருக்கிறது. இந்த அறிக்கையிலே 8வது பக்கத்திலே 17வது பாராவிலே கோயம்புத்தூர் விவசாயிகளுக்கு 10 மாதம் வேலை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளத்தை ஆறு மாதம் மட்டும் வருஷத்திற்கு வேலைசெய்கிற கிழக்குத் தஞ்சையில் உள்ளவர்களுக்கு கொடுப்பது நியாயம் என்று சொல்கிறார்களா? இது ஒரு அறிக்கையா? எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். பக்கம் 8-ல் பாரா 17-லே சொல்லப்பட்டிருக்கிறது. வேலை செய்யாதவர்களுக்கும் கூலி கொடுக்க வேண்டுமா? இராமநாதபுரம் ஜில்லாவில் 4 பேர்கள் செய்யக்கூடிய வேலையை கிழக்குத் தஞ்சையில் 12 பேர்கள் செய்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) எனக்கு இன்னும் ஃபைவ் மினிட்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஃபைவ் மினிட்ஸ் கொடுக்க முடியாது. இன்னும் மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : இது முக்கியமான விஷயம், எனவே அதிகமாக நேரம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முக்கியந்தான். ஆனால் மற்றவர்களும் பேசவேண்டியிருப்பதால் சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : 15 பேர்கள் செய்கின்ற வேலையை அங்கே 22 பேர்கள் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது. வெளிமாவட்டங்களிலிருந்து யாரும் வரக்கூடாத அளவுக்குச் செய்யப்பட்டிருக்கிறது. ஜனநாயகம் தழைத்தோங்கக்கூடிய இந்த ஆட்சியில், திருவள்ளுவர் ஆட்சியிலே, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தஞ்சைக்குச் செல்லக்கூடாதா ? போகக்கூடாது என்று சொன்னால்

பம்பாயில் சிவசேனைக்காரர்கள் சொன்னால் அது சரியா? கணபதியாப் பிள்ளை அவர்கள் தம்முடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள்,

'Therefore, it would not be proper or feasible to impose a ban on the movement of outside labour.'

என்று. வர வர பின்னாலே யாருமே தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளாவிட்டாலும் அரசாங்கம் 144 நடையுத்தரவு போடலாம் என்று 15-வது பக்கத்திலே சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு அறிக்கையா? நாம் இருக்கலாம்; போகலாம்; சட்டம் போடுகிறபோது போடுகிற சட்டம் விவசாயிகளால் மதிக்கப்பட வேண்டும்; மக்களால் மதிக்கப்பட வேண்டும்; தொழிலாளர்களால் மதிக்கப்படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே 15 பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கரு. சீமைச்சாமி: எல்லாப் பேர்களும் ஒரு மாதிரியாகப் பேசுவார்கள், நான் ஒரு மாதிரியாகப் பேசுவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுகின்ற முறையைப்பற்றி நான் சொல்லவில்லை. இப்பொழுதே நீங்கள் 10 நிமிடம் பேசிவிட்டீர்கள்.

திரு. கரு. சீமைச்சாமி: இன்னும் அதிகமாக நேரம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்று நாட்களுக்குள் முடிக்க வேண்டியிருக்கிறது. நீங்கள்தானே முடிவு செய்திருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி: இந்த அறிக்கை சரியாகத் தயார் செய்யப்பட்டிருக்கிறதா? காஸ்ட் ஆப் கல்டிவேஷன் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பக்கம் 11-ல் 9 பேர்கள் உழுவதற்கு அதற்கு 24 ரூபாய் 75 பைசா என்று சொல்லியிருக்கிறார்கள். மனுஷன் மட்டுமா உழுகிறான்? மாட்டு விஷயம் என்ன? இது கணபதியாப் பிள்ளைக்குப் புரியவில்லையா? அவர் ஒரு நாளைக்கு உழுது பார்த்து பிறகு இந்த அறிக்கையைத் தயாரித்திருந்தால் நன்றாக இருக்கும். மேனேஜ்மெண்ட் ரெம்யூனரேஷன் என்று 45 ரூபாய் போட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கிறபோது கணபதியாப் பிள்ளை ரிப்போர்ட் கணக்கு வாத்தியார் சராசரி கணக்குப் போட ஆற்றிலே இறங்கி மாண்டதைப்போல், அவர்களுடைய ரிப்போர்ட் இருக்கிறது. எனவே மீண்டும் பரிசீலனை செய்து விவாசாயிகளுக்கு நன்மை செய்யக்கூடிய முறையில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கு எல்லாம் பத்து நிமிடத்திற்கு மேலே பேசுவதற்கு இடம் இல்லை. அப்படிப் பத்து நிமிடங்களுக்கும் மேலாகப் பேசினால் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பாக அமைச்சர் அவர்கள் பல விஷயங்களைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். திரு. கணபதியாப் பிள்ளை கீழ்த் தஞ்சை விவசாயிகளின் கூலி உயர்வுக் கோரிக்கை நியாயம் என்று கூறி மிராசுதார்கள் அதைக் கொடுக்க வேண்டு மென்று தெரிவித்திருக்கிறார்கள் . . .

9. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக்குழுவின் கூட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 11½ மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் பேரவைத் தலைவரின் அறையில் நடைபெறும். அக்குழுவின் உறுப்பினர்கள் அங்கே கூடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

8. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

கிழக்கு தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை தொழிலாளர் சிக்கல்கள் குறித்த திரு. கணபதியாப் பிள்ளை விசாரணைக் (குழுவின் அறிக்கைமீது விவாதம்)—(தொடர்ச்சி).

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் : 1944-ஆம் ஆண்டு முதல் இதற்காக விவசாயிகள் நீதி கோரிப் போராடியும், தியாகம் செய்தும், நிலப்பிரபுத்துவத்தினால் வெண்மணி நிகழ்ச்சி ஏற்பட்டதும், சிக்கல் பக்காரி இறந்ததும் இப்படிப்பட்ட கொடுமை களுக்கெல்லாம் பிறகு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு கமிஷன் நியமித்திருப்பது பாராட்டத்தக்கது. இருபத்தைந்து வருஷங் களாக விவசாயத் தொழிலாளர்கள் படுகின்ற கஷ்டங்கள் சொல்லும் தரமன்று. பொருளாதார ரீதியாகக் கடைசியிலேயும், உற்பத்திக்கு முதுகெலும்பாகவும் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டும், உழைக்கமுடியாத கூட்டம் அதற்கெதிராகக் கூச்சலிட்டது, அதைக் கேட்கவில்லை. அதற்குப் பிறகு அடைந்த கஷ்டங்களையெல்லாம் பார்த்துத்தான் காலம் சென்ற முதலமைச்சர் அவர்கள் இந்தச் சூழ்நிலையிலே ஒரு கமிஷனை இதற்காக நியமித்தார்கள். இந்த விவசாய அவசரச் சட்டம் போட்டதற்குப் பிறகு அதற்காக நிலப்பிரபுக்கள் ஸ்ட்ரைக் செய்தார்கள். விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானது என்றும்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)